IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.77 /2024

dated : 03.03.2026

D.W.1

Name இளங்கோ சதீஷ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ராஜநிலை தேக்கு மரத்தால் ஆனாது என்றால் சரிதான். அது என்னால் போடப்பட்டதாகும். நான் அவ்வாறு என்னுடைய செலவில் அமைத்தேன் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. Pollycab எனப்படும் நிறுவன தயாரிப்புகள் கொண்ட மின்சாதன பொருட்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது அது தரம்வாய்ந்தது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. குளியலறை மற்றும் கழிவறை இணைப்புகள் ஜாக்குவார் நிறுவனத்தின் தயாரிப்புகள் என்றால் சரியல்ல பாரிவேர் நிறுவனத்தின் தயாரிப்புகள் இரண்டு மட்டும் பொருத்தப்பட்டது மற்றவை பெயர் தெரியாத நிறுவன தயாரிப்புகளாகும். ரூ.49,86,000/- செலுத்தியதாக நான் தாக்கல் செய்துள்ள வங்கி கணக்கு பட்டியலில் துலங்காது என்றால் சரிதான் அதில் குறிப்பிட்ட தொகை போக மற்றவை நேரில் ரொக்கமாக கொடுத்ததாகும். தரம் குறைந்த பொருட்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது என நான் வாதிக்கு கடிதம் ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேல்நிலை

நீர்த்தேக்க தொட்டி ஒன்று மட்டும் Syntex யை வாதி கொண்டு வந்தார் அதை வாதி பொருத்தவில்லை நான் பொருத்தினேன். ஒப்பந்தப்படி இரண்டு அமைக்க வேண்டும். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதைவிட கூடுதல் கட்டுமானங்களை வாதி மேற்கொண்டுள்ளார் என்றும் எனவே நான் வாதிக்கு ரூ.10,30,000/- செலுத்த வேண்டுமென்றால் சரியல்ல. காவல்துறையில் பொய் புகார் கொடுத்து வாதியை மிரட்டி வாக்குமூலம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எனவே வாதி வழக்குரையில் கோரியபடி தீர்ப்பாணை பிறப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.03 17:07:14 +0530